# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டுக் கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

**HDFC** வங்கியில் கீழ் காணும் பதவிக்கு திறமையான, செயல்திறன்மிக்க, சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முகாமைத்துவ பயிலுநர்கள்**
**MANAGEMENT TRAINEES**

**தேவையான தகைமைகள்**

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் கீழ்காணும் பாடம்/பிரிவுகளுக்கு குறைந்தபட்சம் இரண்டாம் வகுப்பில் உயர் சித்தி அல்லது 4.0 ஆன உச்ச மட்டத்தில் குறைந்தபட்சம் 3.5 தர புள்ளி சராசரியுடன் (GPA) கூடிய பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல்.

  பொருளியல், புள்ளிவிபரவியல், கணிதம், கணக்கியல், வங்கியியல், நிதி, வணிகம், வர்த்தக நிர்வாகம், முகாமைத்துவம் (அரச/நிதி/கணக்கீடு/வர்த்தகம்) சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவம், பொறியியல், கணினியியல், பௌதீகவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச வணிகவியல், மதிப்பீட்டியல், கமத்தொழில் அல்லது இதர வங்கியில் மற்றும் நிதித்துறை சார்ந்த இதர ஏதேனுமொரு துறை.

**அல்லது**

- மேற் குறிப்பிடப்பட்டுள்ள பாடம்/ பிரிவுகளுக்கு ஏற்புடையதாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட பட்டப்படிப்புடன் இலங்கை வங்கியாளர்களின் நிறுவனத்தின் (IBSL) ) அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய வங்கியாளர்களின் நிறுவகத்தின் (CIB) – UK இறுதி பரீட்சையை சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

**கீழ் காணும் ஏதாவது நிறுவனங்களில் பூரண தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் (இறுதி சித்தி)**

- இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவகம் (ICA - SL )
- ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் அமைப்பு (CIMA - UK )
- ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சான்றுரைக்கப்பட்ட கணக்காளர்களின் அமைப்பு (ACCA - UK)
- இலங்கை சான்றுரைக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்களின் நிறுவகம் (CMA - SL)
- ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனம் (CMA - UK )
- CFA நிறுவனத்தின் பட்டய நிதி ஆய்வாளர் பாடநெறி (CFA - USA )
- இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டய கணக்காளர் நிறுவகம் (ICA - EW)

**அல்லது**

சட்டத்தரணி

**வயதெல்லை -** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 30 வயதை விட குறைவாக இருத்தல் வேண்டும்.

**பதவிக்கு ஏற்புடைய விதிகளும் நிபந்தனைகளும்**

- இரண்டு ஆண்டு கால பயிற்சிக் காலத்தை நிறைவு செய்ய வேண்டுமென்பதோடு, பயிற்சி காலப்பகுதியில் மாதமொன்றுக்கு ரூ 75000 கொடுப்பனவு வழங்கப்படும்.

- தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் நாட்டில் எந்தவொரு பகுதியிலும் அமைந்துள்ள கிளை அலுவலகத்தில் சேவையாற்றுவதற்கு தயாராக இருக்க வேண்டுமென்பதோடு, ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து முதலில் இணைக்கப்படுகின்ற மாவட்டம்/பிரதேசத்தில் பயிற்சிக் காலமும் உள்ளடங்களாக குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் சேவையாற்ற வேண்டியது கட்டாயமாகும்.

- பயிற்சிக் காலப்பகுதியில் திருப்திகரமான செயலாற்றுகையை பூர்த்தி செய்ததன் பேரில் III (3) தரத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர் (Executive) நிரந்தர பதவியில் அமர்த்துவதற்கு பரிசீலிக்கப்படும்.

**ஆட்சேர்ப்பு செய்வதற்கான விதிகளும் நிபந்தனைகளும்**

குறிப்பிட்ட விண்ணப்பம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான www.doenets.lk இணையதளத்தில் வெளியிடப்படுவதோடு, 2024 ஜூலை மாதம் 22 ஆந் திகதி மு.ப 09.00 மணி தொடக்கம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2024 ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி பி.ப 09.00 மணி ஆகும்.

**ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறை**

வேட்பாளர்கள் எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் பெறும் பெறுபேறுகளையும் நேர்முகப் பரீட்சையில் பெறும் புள்ளிகளையும் அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படும் பட்டியலின் வரிசைக்கிரமத்தின் படி அறிவிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும், நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதி தொடர்பான தீர்மானங்கள் HDFC வங்கியின் தேர்வுக்கமைய மேற்கொள்ளப்படும்.

**எழுத்துமூல பரீட்சை**

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்படி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புகளுக்கு ஏற்புடைய எழுத்துமூல பரீட்சை நடாத்தப்படும். அதனை 2024 அக்டோபர் மாதத்தில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இப் பரீட்சை கொழும்பில் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நிறுவப்படும் பரீட்சை நிலையங்களில் நடைபெறும். எச்சந்தர்ப்பத்திலும் தமது விருப்பத்திற்கேற்ப நகரை அல்லது நகரங்களை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது. குறிப்பிட்டதொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சை நடாத்துவதற்கு போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்திருக்கவில்லை எனில், அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏற்புடைய நிலையத்தை தெரிவு செய்துள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் இரண்டாவது தெரிவின் பிரகாரம் வேறு பொருத்தமான நிலையத்துக்கோ அண்மித்த நகரமொன்றில் நிறுவப்படும் பிறிதொரு பரீட்சை நிலையத்துக்கோ அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

| மாவட்டம் | மாவட்ட குறியீடு | மாவட்டம் | மாவட்ட குறியீடு |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | பதுளை | 08 |
| கண்டி | 02 | இரத்தினபுரி | 09 |
| காலி | 03 | நுவரெலியா | 10 |
| யாழ்ப்பாணம் | 04 | மாத்தளை | 11 |
| திருகோணமலை | 05 | மட்டக்களப்பு | 12 |
| குருணாகல் | 06 | | |
| அநுராதபுரம் | 07 | | |

**பரீட்சைக்கு உள்ளடக்கப்படும் பாடங்கள்**

| பாட இல | பாடம் | மொழிமூலம் | நேரம் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தி அடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| **01** | ஆங்கில மொழி | ஆங்கிலம் | 1½ மணித்தியாலம் | **100** | **40** |
| **02** | ஆய்வுத் திறன்கள்/ பொது உளச்சார்பு | சிங்களம்/ ஆங்கிலம்/ தமிழ் | 1 மணித்தியாலம் | **100** | **40** |
| **03** | பொது அறிவு | சிங்களம்/ ஆங்கிலம்/ தமிழ் | 1 மணித்தியாலம் | **100** | **40** |

**குறிப்பு**

எழுத்துமூல பரீட்சையை நடாத்துவதன் மூலம் இப் பதவிக்கு ஏற்புடைய கடமைகளை ஆற்றுவதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள ஆற்றல் மற்றும் திறன்களை பரிசோதிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எழுத்துமூல பரீட்சையில் சித்தி பெற வேண்டுமெனில், குறிப்பிட்ட பரீட்சார்த்தி அந்தந்த பாடத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% பெற வேண்டும்.

**நேர்முகப் பரீட்சை**

விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரி இப் பதவிக்கு ஏற்புடைய பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்துள்ளாரா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் இப்பதவியை வகிப்பதற்கு தகுதியானவரா என்பதை மேலும் பரிசோதிப்பதற்குமே இந்த நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகிறது. எவரேனுமொரு விண்ணப்பதாரி எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும், பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்யப்படவில்லை எனில் அவர் இப் பதவியை பெறுவதற்கு தகுதி பெற மாட்டாரென்பது விஷேடமாக வலியுறுத்தப்படுகிறது. நேர்முகப் பரீட்சையில் பெறக்கூடிய அதிகப்பட்ச புள்ளிகள் 100 என்பதோடு, அதன் போது விண்ணப்பதாரியின் ஆளுமை மற்றும் இதர பண்புகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படும். HDFC வங்கியின் தேர்வுக்கமைய போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரிகளில் தற்பொழுதுள்ள பதவி வெற்றிடங்களில் மூன்று மடங்குக்கு ஒத்த எண்ணிக்கையினர் பதிவு எண் வரிசைப் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**பரீட்சைக்கு ஏற்புடைய நிபந்தனைகள்**

I. ஆட்சேர்ப்புகளுக்கு ஏற்புடைய எழுத்துமூல பரீட்சையின் முதலாவது பாடம் (ஆங்கில மொழி) ஆங்கில மொழியில் மாத்திரம் நடைபெறுவதோடு, இரண்டாவது (ஆய்வுத் திறன்கள்/பொது உளச்சார்பு) மற்றும் மூன்றாவது (பொது ஆங்கிலம்) பாடங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் நடைபெறும். இரண்டாவது மற்றும் மூன்றாவது பாடங்களுக்கு அவரவர் தேர்விற்கேற்ப ஏதேனும் ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சையில் தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. சகல விண்ணப்பதாரிகளும் மூன்று பாடங்களுக்கும் ஏற்புடைய பரீட்சைகளில் தோற்ற வேண்டியது கட்டாயமாகும்.

II. பரீட்சைக்கான இணையவழி விண்ணப்பங்களை ஆங்கிலத்தில் மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும். இணையவழி ஊடாக பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கிடைத்த

பின்னர் பரீட்சார்த்திகள் வழங்கியுள்ள கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்பப்படும் குறுஞ் செய்தி அல்லது மின்னஞ்சல் ஊடாக குறிப்பிட்ட விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்படும்.

III. பரீட்சைக் கட்டணம் ரூ 1200 ஆகும். இணையவழி ஊடாக விண்ணப்பிக்கும் கட்டமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள கீழ் காணும் கட்டணச் செலுத்துகை முறைகள் ஊடாக மாத்திரம் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்துதுல் வேண்டும்.

1. சகல வங்கிக் கடன் அட்டைகள்
2. சகல வங்கி டெபிட் அட்டைகள்
3. இலங்கை வங்கியின் இணையவழி வங்கியியல் முறை
4. இலங்கை வங்கியின் கட்டண செலுத்துகை பத்திரம்

### குறிப்பு

மேற் குறிப்பிட்டுள்ள செயன்முறைகள் ஊடாக கட்டணங்களை செலுத்துதல் தொடர்பான வழிமுறைகள் இணையதளத்தின் பரீட்சைக்கு குறிப்பிட்ட பகுதியில் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

IV. பணம் கிடைக்கப்பெற்றதென குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். மேற்கூறிய பரீட்சைக் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு குறித்த கட்டணத்தை விட குறைவாகவோ அதிகமாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய கட்டண முறைகள் மூலம் பணம் செலுத்தும் போது ஏற்படும் தவறுகளுக்கு பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பு கூறாது.

V . செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தினாலும் மீள செலுத்தவோ பிறிதொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

VI . பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் என்பதோடு, விண்ணப்பதாரி அதன் மீது தெளிவாக தெரியும் வகையில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். விண்ணப்பதாரிகள் அரசாங்க பாடசாலை அதிபர், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், வதிவிட பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்திய பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிஸ், முப்படையில் பணியாற்றும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரச அல்லது மாகாண அரச சேவைக்கு இணைக்கப்பட்ட நிரந்தர சேவையிலுள்ள உத்தியோகத்தர், பௌத்த விஹாரையொன்றின் வணக்கத்துக்குரிய தேரர்

அல்லது குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கும் வேறு ஏதேனுமொரு மதத்தைச் சேர்ந்த மதகுரு ஆகியோரில் ஒருவரின் ஊடாக ஏற்புடைய பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

குறிப்பு

எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சை அனுமதிப்பத்திரம் இல்லாமல் பரீட்சை மண்டபத்துக்கு பிரவேசிக்க முடியாது. சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்திக்கொண்ட பரீட்சை அனுமதிப்பத்திரத்தை பரீட்சைக்கு தோற்றுகின்ற முதலாவது நாளிலேயே பரீட்சை மண்டபத்துக்கு பொறுப்பான மேற்பார்வை உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

VII. பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்திராத ஆட்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாகாது. விண்ணப்பதாரியொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதை தவிர்க்க வேண்டும். விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான பரீட்சை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதன் மூலம் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது மேற் கூறிய பதவியை வகிப்பதற்கு தகைமை பெற மாட்டார்.

VIII. இப் பதவிக்கு ஏற்புடைய பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மற்றும் குறிப்பிட்ட வயதெல்லைக்குட்பட்ட ஆட்கள் மாத்திரம் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கியவுடனேயே பத்திரிகை விளம்பரம் ஊடாகவும் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையதளத்தின் ஊடாகவும் அது தொடர்பாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்த அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை எனில், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஏற்பாட்டு பிரிவுக்கு அது தொடர்பாக அறிவிப்பதற்கு விண்ணப்பதாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிடுவதற்கு விண்ணப்பதாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே குடியிருப்பாளராக இருப்பின் மேற் குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் பரீட்சை அனுமதிப்பத்திரத்தை அனுப்பக்கூடிய தொலைநகல் இலக்கத்தை தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை அனுப்புவது மேலும் பயன்மிக்கதாக இருக்கும். பரீட்சைகள்

திணைக்களத்தை தொடர்பு கொள்ளும் போது கீழ் காணும் விபரங்களை உடன் வைத்திருத்தல் திணைக்களம் கோரும் விபரங்களை உடனடியாக வழங்குவதற்கு உறுதுணையாக இருக்கும். உதா: விண்ணப்பத்தின் நிழற் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் உங்களுக்கு கிடைக்கும் பற்றுச்சீட்டு.

IX. நிரப்ப வேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல், பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு தீர்மானித்தல் அல்லது இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படாத பிறிதொரு விடயம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு HDFC வங்கிக்கு அதிகாரமும் உரிமையும் உண்டு.

X. இப் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைளுக்கு ஏற்புடைய பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விதிக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செயற்படுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு கடப்பாடு உண்டு. ஏற்புடைய விதிகளையும் நிபந்தனைகளையும் மீறுகின்ற எவரேனும் விண்ணப்பதாரி இருப்பாரெனில், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்குட்படுவார்.

XI. விண்ணப்பதாரி தான் தோற்றுகின்ற சகல பாடங்களின் போதும் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிப்பதற்கு பரீட்சார்த்திகளுக்கு முடியும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு

(இ) இலங்கையில் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

விண்ணப்பதாரிகள் முகம் மற்றும் காதுகளை மறைக்காது தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் இருப்பின் அவருக்கு பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறும் வரைக்கும் பரீட்சை கண்காணிப்பாளர்களுக்கு தெளிவாக அடையாளங் காணக்கூடிய வகையில் முகத்தையும் காதுகளையும் மறைக்காது இருத்தல் வேண்டும்.

**XII. பெறுபேறுகளை வெளியிடல்**

குறிப்பிட்ட எழுத்துமூல பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகளின் வரிசைக்கமைய பரீட்சை இலக்கத்தை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணத்தையும் நிலவும் வெற்றிடங்களுக்கு சமமான

விண்ணப்பதாரிகளின் பெயர்களையும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் HDFC வங்கிக்கு அனுப்புவார்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது www.results.exams.gov.lk எனும் இணையதளத்தில் பிரசுரிப்பதன் மூலமாகவோ அறிவிக்கப்படும்.

XIII. இந்த விளம்பரத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பிரதிகளில் யாதேனும் பொருத்தமின்மை ஏற்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள பிரதிக்கு முன்னுரிமை அளித்து கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

**உதவி பொது முகாமையாளர் – மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**

**HDFC வங்கி,**

**த. பெ இலக்கம் 2085**

**சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**

**கொழும்பு 02**

**தொலைபேசி இல: 0112356800**

**இணையதளம்: www.hdfc.lk**